முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 997

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.06.2022, புதன்கிழமை

1. தவபலமிக்க அரங்கனே
   தர்மபலம் கொண்ட தேசிகனே
   பேருலகை ஞான உலகமாக்க
   புண்ணியத்தைக் கொண்டே அற்புதங்கள் நிகழ்த்துகின்ற
2. நிகழ்த்துகின்ற அரங்கனே ஞான தேசிகனே
   நிலவுலகில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் நிகழ்த்திடுவேன் ஞானஅறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆனி மாதம் 08 நாள், 22.06.2022 புதன்கிழமை)
   ஜெகத்தினில் அரங்கன் புகழ் நிலைத்து நிற்க
   செப்பிடுவேன் சைவ நெறிகொண்டு உலகோர்க்கு
3. உலகோர்க்கு தர்மஞான வழிகளை
   சிறப்புற காட்டும் ஞான தேசிகனே
   மறுப்பின்றி உன் வரம் உலகோர் பெற்றால்
   மண்ணுலகமே ஞானிகளை கூட்டி
4. கூட்டியே ஞான ஆட்சிக்காலமெலாம்
   நிலவுலகம் சடுதி காணக்கூடும்
   வாட்டமான மக்களின் நிலைகள் அனைத்தும்
   வருமுலகில் அகன்றோடி வளமும் சிறப்பும்
5. சிறப்பான இயற்கை பலமும்
   செப்பிடுவேன் மக்கள் இடையே தயவும்
   சமூகத்தை மாற்றுகின்ற மகத்துவமிக்க அறிவும் தெளிவும்
   வகைபட மிகுதி கண்டு வளர்ச்சி காணும் வையகமே ஞான யுகமாற்றம் பெறும்
6. பெருமைமிக்க அரங்கன் திருவடி பற்ற
   பூவுலகோர் ஞானிகளாகி சிறக்க நேரும்
   வருமுலகில் தடையற உலகோர் பிரணவக்குடில் நோக்கி வந்து
   வல்லமை மிக்க அரங்கனை சேவித்தாலே இந்த அற்புதம் நடக்கும்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

"வல்லமை மிக்க அரங்கனை சேவித்தாலே இந்த அற்புதம் நடக்கும்" முருகப்பெருமானே துறையூர் ஓங்காரக் குடிலாசானாக அவதரித்து இருப்பதால், துறையூர் ஓங்காரக்குடில் ஆசானை தரிசனம் செய்தால் முருகப்பெருமானை தரிசித்த பலனை பெறலாம்.